**செய்தி வெளியீடு எண்: 803** **நாள்: 18.11.2019**

**செய்தி வெளியீடு**

சென்னை, செனாய் நகர், அம்மா அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரிய உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி இவ்விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர். நிலோபர் கபீல் அவர்கள் பேசியதாவது :–

தமிழ்நாடு அரசு தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நலவாரியம் ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் உருவாக்கப்பட்டது.

இவ்வாரியத்தில் உறுப்பினராக 18 வயது பூர்த்தியான மற்றும் 60 வயதுக்குட்பட்ட அமைப்புசாராத் தொழிலாளர்கள் 53 வகையான கட்டுமானத் தொழில்கள் மற்றும் 69 வகையான அமைப்புசாராத் தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் இவ்வாரியங்களில் உறுப்பினராக பதிவு பெறவும் நலத் திட்ட உதவிகள் பெறவும் தகுதியுடையவராகிறார்கள்.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு விபத்து மரணம், விபத்து ஊனம், இயற்கை மரணம், ஈமச் சடங்கு உதவித்தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, ஓய்வூதியம்/முடக்க ஓய்வூதியம் போன்ற நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பணியில் ஈடுபட்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டு இறக்கும் தொழிலாளர்களுக்கான விபத்து மரண நிதி உதவி ரூ. 5,00,000/– வழங்கப்பட்டு வருகிறது. கட்டுமானத் தொழிலாளர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் நகரும் மருத்துவமனைகள் இயங்கி வருகிறது. இதன் மூலம் 88,056 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 1000 தொழிலாளர்கள் தங்கும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம் எழிச்சூர் மற்றும் தையூர் கிராமங்களில் தூங்கும் அறைகள் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் அம்மா உணவகங்களில் 40,130 பயனாளிகள் விலையில்லா உணவருந்திவுள்ளனர்.

சென்னை மாவட்டத்தில் மட்டும் 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் **31.10.2019** வரையிலான காலத்தில் **72** ஆயிரத்து **715** தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு, **82** ஆயிரத்து **436** பயனாளிகளுக்கு, ரூ.**24** கோடியே **56** இலட்சம் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நிதியாண்டு காலத்தில் சென்னை மாவட்டத்தில் 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் **2** ஆயிரத்து **308** தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டு, **4** ஆயிரத்து **997** பயனாளிகளுக்கு, ரூ.**2** கோடியே **46** இலட்சம் உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளது.

கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் தலா ரூ. 2,177/– மதிப்புள்ள பாதுகாப்பு காலணிகள், பாதுகாப்பு தலைகவசம், பளிச்சிடும் மேலங்கி, கையுறைகள் மற்றும் பாதுகாப்பு கண்ணாடிகள் ஆகிய பாதுகாப்பு உபகரணங்கள் இன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களை சேர்ந்த 2,238 கட்டுமானத் தொழிலாளர்களுக்கும், மேலும் 3,983 அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, விபத்து மரணம் உதவித்தொகை இயற்கை மரணம் உதவித்தொகை என மொத்தம் ரூ.99.58 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களை பெற்று நீங்கள் எல்லாம் சிறப்பாக வாழவும் , பணியிடத்தில் பாதுகாப்பாக பணிபுரிய வேண்டும் எனவும் கேட்டு கொள்கிறேன்.

இவ்விழாவில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு முதன்மை செயலாளர் திரு. MD. நசிமுத்தின், இ.ஆ.ப., தொழிலாளர் துறை ஆணையர் முனைவர். இரா. நந்தகோபால், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. R. சீதாலட்சுமி, இ.ஆ.ப., தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் திரு.கா. மனோகரன், கூடுதல் ஆணையர் திருமதி. அ. யாஸ்மின் பேகம், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரிய செயலாளர் திரு.தி. குமரன், தொழிலாளர் இணை ஆணையர்கள் திரு.என். கோவிந்தன், திரு.சு.பொன்னுசாமி மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**